கடலூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி. ஆ. சிவயோகம்
உதவி இயக்குநர்

ந.க.எண்.000372/அ1/2019 நாள் : 28 .01..2020

பொருள் : நிர்வாகம் – அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி IV – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு 2015 – 2016, 2016 – 2017 மற்றும் 2017 – 2018 தட்டச்சராகப் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண். 1717/PSD-A/2019, நாள்: 20.02.2019
2. சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதம் ந.க.எண்.023322/இ2–1/2019, நாள்: 20.02.2019
3. கடலூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:25.02.2019
4. அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 22.07.2008

-----

ஆணை:–

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின்படி தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2ல் காணும் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க பார்வை 3ல் காணும் கடலூர் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, கடலூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சர் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழேக் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளரின் பணியினை அன்னாரின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது எனவும் இவர் தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை மனநிறைவுடன் முடிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறார்.

இந்நியமனம் தற்காலிகமானதெனவும் தொகுதி IV பணி நியமனத்தில் சென்னை / மதுரை உயர்நீதிமன்றத்தில் 2015 – 2016, 2016 – 2017 மற்றும் 2017 – 2018 நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவின் முடிவிற்கு உட்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி<br>திரு. | பணியேற்ற நாள் | பணிவரன் முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1. | மூ. திருமலைக்கண்ணன்<br>தட்டச்சர் | 01.03.2019 மு.ப. | 28.01.2020 மு.ப. |

28/1/2020
உதவி இயக்குநர்
கடலூர்

பெறுநர்
திரு. மூ. திருமலைக்கண்ணன்,
தட்டச்சர்
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடலூர்.

நகல்:

1. சென்னை – 6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கருவூல அலுவலர், கடலூர்
3. உபரி – 2